www.Padasalai.Net www.CBSEtips.in

# லொயோலா

# வரலாறு

# 12

## தொகுதி - 1 & 2

**இணைப்பு: காலக்கோடு, வரைபடம்**

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி விடைக் குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

**Loyola Publications**
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹.250/-

*Less Strain Score More ★*

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

ஆசிரியர்:

**க. பாலசுப்ரமணியன்** M.A., B.Ed.,

முதுகலை வரலாறு,

திருச்சி.

Loyola Publications

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# முகப்புரை

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே,

மேல்நிலை **12ம் வகுப்பு வரலாறு** வினா-விடைகள் மிக எளிமை படுத்தப்பட்டுள்ளன. தமிழக அரசின் புதிய பாடத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள மேல்நிலை 12ம் வகுப்பு வரலாறு பாடநூல் வினாக்களுக்கு உரிய விடைகள் சிறப்பாகவும், இத்துடன் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்த கூடுதல் வினா-விடைகளும் எளிதாக படிப்பதற்கு ஏற்ப கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் **தொகுதி 1 & 2** வெளியிடப்படுகிறது.

இத்துடன் வரைபட பயிற்சியும், காலக்கோடும் மற்றும் அரசுத் தேர்வு **(மார்ச் 2020)** வினாத்தாளும் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வினா-விடை நூலை வாங்கி பயின்று அதிக மதிப்பெண்கள் பெற அன்புடன் வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**க. பாலசுப்ரமணியன்** M.A., B.Ed.,

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்


| தொகுதி - 1 | | |
|---|---|---|
| அலகு | பாடத்தலைப்புகள் | ப. எண் |
| 1 | இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி | 5 |
| 2 | தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும் | 17 |
| 3 | இந்திய விடுதலைப்போரில் முதல் உலகப்போரின் தாக்கம் | 25 |
| 4 | காந்தியடிகள் தேசியத் தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல் | 32 |
| 5 | ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம் | 44 |
| 6 | தேசியவாத அரசியலில் வகுப்புவாதம் | 52 |
| 7 | இந்திய தேசிய இயக்கத்தின் இறுதிக்கட்டம் | 60 |
| 8 | காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு | 69 |
| | வரைபடங்கள் | 80 |
| தொகுதி - 2 | | |
| 9 | ஓர் புதிய சமூக - பொருளாதார ஒழுங்கமைவை எதிர் நோக்குதல் | 87 |
| 10 | நவீன உலகம்: பகுத்தறிவின் காலம் | 98 |
| 11 | புரட்சிகளின் காலம் | 112 |
| 12 | ஐரோப்பாவில் அமைதியின்மை | 127 |
| 13 | ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும் | 140 |
| 14 | இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும் | 155 |
| 15 | இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் | 169 |
| | வரைபடங்கள் | 184 |
| | மாதிரி வினாத்தாள்கள் | 201 |
| | அரசு துணைத் தேர்வு - ஆகஸ்ட் 2022 | 210 |
| | அரசு பொதுத் தேர்வு - மார்ச் 2023 | 214 |


www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# அலகு 1 இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. **காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?** மார்ச் 2023
அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918 **விடை: அ) 1915**

2. **இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?** மார்ச் 2020
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855 **விடை:ஆ) 1835**

3. **மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.** ஆகஸ்ட் 2022
அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கின்ஸ்
இ) மாக்ஸ் முல்லர் ஈ) அரவிந்த கோஷ் **விடை: ஈ) அரவிந்த கோஷ்**

4. **"சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" - எனக் கூறியவர்.** மே 2022
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பாரதியார் **விடை: அ) பாலகங்காதர திலகர்**

5. **பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| அ | பாலகங்காதர திலகர் | 1 | இந்தியாவின் குரல் |
| ஆ | தாதாபாய் நௌரோஜி | 2 | மெட்ராஸ் டைம்ஸ் |
| இ | மெக்காலே | 3 | கேசரி |
| ஈ | வில்லியம் டிக்பை | 4 | இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் |

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 1, 4, 2 இ) 1, 3, 2, 4 ஈ) 4, 2, 3, 1
**விடை: ஆ) 3, 1, 4, 2**

6. **பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?** ஆகஸ்ட் 2022

| | | |
|---|---|---|
| அ | ஆங்கிலக் கல்விச் சட்டம் | 1843 |
| ஆ | அடிமைமுறை ஒழிப்பு | 1859 |
| இ | சென்னைவாசிகள் சங்கம் | 1852 |
| ஈ | இண்டிகோ கலகம் | 1835 |

**விடை: இ) சென்னைவாசிகள் சங்கம் - 1852**

7. **பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான கால வரிசையைத் தேர்வு செய்க.**
(i) கிழக்கிந்தியக் கழகம் (ii) சென்னை மகாஜன சங்கம்
(iii) சென்னைவாசிகள் சங்கம் (iv) இந்தியச் சங்கம்
அ) ii, i, iii, iv ஆ) ii, iii, i, iv இ) iii, iv, i, ii ஈ) iii, iv, ii, i
**விடை: இ) iii, iv, i, ii**

8. **இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்** மார்ச் 2023
அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள்
இ) A.O.ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர் **விடை: இ) A.O.ஹியூம்**

9. **இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்** மார்ச் 2020 மே 2022
அ) சுரேந்திரநாத் பானர்ஜி ஆ) பத்ருதீன் தியாப்ஜி
இ) A.O.ஹியூம் ஈ) W.C.பானர்ஜி **விடை: ஈ) W.C.பானர்ஜி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. **"இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்**

அ) பாலகங்காதர திலகர் ஆ) M.K.காந்தி

இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

**விடை: இ) தாதாபாய் நௌரோஜி**

11. **"இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" (Poverty and Un-British Rule in India) என்ற நூலை எழுதியவர்**

அ) பால கங்காதர திலகர் ஆ) கோபால கிருஷ்ண கோகலே

இ) தாதாபாய் நௌரோஜி ஈ) எம்.ஜி.ரானடே

**விடை: இ) தாதாபாய் நௌரோஜி**

12. **கூற்று : ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.**
**காரணம் : இங்கிலாந்தின் தடையற்ற வணிகக் கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது.**

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

இ) கூற்று சரி ; காரணம் தவறு

ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு **விடை: இ) கூற்று சரி ; காரணம் தவறு**

13. **ஒரிசா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை/எது?**

**கூற்று 1 :** 1866 ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர்.

**கூற்று 2 :** பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது.

**கூற்று 3 :** ஒரிசா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ள தூண்டியது.

அ) 1, 2 ஆ) 1, 3

இ) இவற்றுள் எதுவுமில்லை ஈ) இவை அனைத்தும் **விடை: ஈ) இவை அனைத்தும்**

## II. குறுகிய விடையளிக்கவும்

1. **தேசியம் என்றால் என்ன?** மே 2022

- தேசியம் என்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும், பக்தியோடும் இருத்தல் எனப்பொருள்.
- தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்து பார்ப்பதாகும்.
- ஏனைய நாடுகளுக்கு போட்டியாக தனது நாட்டின் பண்பாடு மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்தும் ஒரு தேசிய உணர்வு ஆகும்.

2. **புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.**

- இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர். நிலம் விற்பனை பொருளாக்கப்பட்டது. வேளாண்மை வணிகமயமாக்கப்பட்டது.
- வறட்சி, பஞ்சம் போன்ற நிகழ்வுகளைக் கணக்கில் கொள்ளாமல் நிலவரியைப் பணமாகக் கணக்கிட்டு நிர்ணயம் செய்தனர்.
- கடனை அடைப்பதற்காக நிலங்களை விற்பனை செய்தனர்.
- விவசாயிகள் சந்தைக்கு தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்தனர்.

3. **அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.**

- 1859-60ல் நடைபெற்ற இண்டிகோ புரட்சியே அவுரி புரட்சியாகும்.
- இப்புரட்சி கம்பெனியின் அடக்குமுறைக் கொள்கைக்கு எதிரான இந்திய விவசாயிகளின் ஒரு எதிர்வினையாகும்.
- இந்திய குத்தகை விவசாயிகள் அவுரியை பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- அவுரிக்குப் பண்ணையார் கொடுக்கும் விலையோ சந்தை விலையை விடக் குறைவாக இருந்தது.
- விவசாயிகள் முன் பணம் பெறவும், புது ஒப்பந்தம் போடவும் மறுத்து கலகத்தில் இறங்கினர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.**

- இல்பர்ட் மசோதா 1883ம் ஆண்டு பிப்ரவரி 9ம் தேதி ரிப்பன் (மார்க்வெல் ஆஃப் ரிப்பன்) அரசப் பிரதிநியாக இருந்த போது இயற்றப்பட்டது.
- இதன் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்றனர்.
- ஆனால் ஐரோப்பியர்களின் எதிர்ப்பினால் மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டன.

**5. நவீன கல்வியில் சமயப்பரப்புக் குழுக்களின் பங்கினை விளக்குக.**

- இந்திய மக்களிடையே நவீனக் கல்வியைக் கற்றுத் தர கிறித்துவ சமய பரப்பு நிறுவனங்களால் முயற்சி எடுக்கப்பட்டது.
- நவீன மதச்சார்பற்ற கல்வியின் மூலமாக கிறித்தவத்தைப் போதிப்பதை சமயப் பரப்பு குழுவினர் கையாண்டன.
- மரபு சார்ந்த கல்வி முறையில், கல்வி கற்பதற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட அடித்தட்டு மக்களும் விளிம்பு நிலை மக்களும் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை நவீன சமயப்பரப்புக் குழுக்கள் வழங்கின.

**6. ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள் என்ன?**

- 1852 பிப்ரவரி 26ல் 'சென்னைவாசிகள் சங்கம்' என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1852 டிசம்பரில் சமர்ப்பித்த மனுவில் ரயத்துவரி, ஜமீன்தாரி முறைகள் வேளாண் வர்க்கத்தினரை கடும் துன்பங்களுக்கு உள்ளாக்கியதை சுட்டிக் காட்டியது.
- பண்டைய கிராமமுறையை மீட்டெடுக்கப்பட வேண்டும் என வற்புறுத்தியது.
- வட்டார மொழிகளில் திறமையின்மையினால் நீதிபதிகளின் தாமத செயல்பாடு பற்றியும், நீதித்துறையின் திறமை பாதிக்கப்படுவதையும் சுட்டிக் காட்டியது.

**7. இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியலை தயார் செய்க.**

| அமைப்புகள் | ஆண்டு | இடம் |
|---|---|---|
| சென்னை வாசிகள் சங்கம் | 1852 | சென்னை |
| சென்னை மகாஜன சங்கம் | 1884 | சென்னை |
| இந்திய சங்கம் | 1865 | இலண்டன் |
| கிழக்கிந்திய கழகம் | 1866 | இலண்டன் |

**8. தொடக்க கால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.** மார்ச் 2023

- தாதாபாய் நௌரோஜி
- சுரேந்திர நாத்பானர்ஜி
- G. சுப்பிரமணியம்
- கோபாலகிருஷ்ண கோகலே
- W. C பானர்ஜி
- பெரோஷா மேத்தா

ஆகியோர் தொடக்ககால தேசிய வாதிகள் ஆவர்.

## III. சுருக்கமாக விடையளிக்கவும்

**1. மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.** ஆகஸ்ட் 2022

- 1835ல் தனது புகழ் பெற்ற "இந்திய கல்வி குறித்த குறிப்புகள்" என்பதை வெளியிட்டார்.
- இக்குறிப்பு, "ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.
- ரத்தத்திலும் நிறத்திலும் இந்தியராகவும் விருப்பத்தில், கருத்தில், ஒழுக்க நெறிகளில், அறிவில் ஆங்கிலேயராய் இருக்கும் ஒருமக்கள் பிரிவினரை இந்தியாவிற்குள்ளேயே உருவாக்க வேண்டும், என குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஆங்கில நவீனக் கல்வியை வழங்கும் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தொடங்கப்பட்டன.

**2. 1853ல் இந்தியச் சீர்திருத்தக் கழக தலைவரின் சென்னை வருகையைக் குறித்து நீ அறிந்தது என்ன?**

- 1853 இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் சென்னைவாசிகள் சங்கத்தின் மனு விவாதிக்கப்பட்டது.
- இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவரான H.d செய்மோர் அக்டோபர் 1853-இல் சென்னை வந்தார்.
- அவர் குண்டூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களைப் பார்வையிட்டார்.
- இருந்த போதிலும் 1853-ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சித் தொடர அனுமதி வழங்கியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.**

மார்ச் 2020 | ஆகஸ்ட் 2022 | மார்ச் 2023

- தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள். தொழில்மயமாக்குதல் போன்ற நவீன சிந்தனைகளைப் பரப்ப மக்களுக்கு உதவியது.
- பத்திரிகைகள் அரசியலை விமர்சனம் செய்யத் தொடங்கின.
- நாட்டினைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து மக்களிடம் பேசின.
- ராஜாராம் மோகன்ராயின் சம்வத் கௌமுதி (வங்கமொழி) பிராத்-உல்-அக்பர் (பாரசீக மொழி) பத்திரிகைகள் மக்கள் நலன் சார்ந்த முக்கியப் பொது விஷயங்களை மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதில் முற்போக்காக பங்காற்றின.
- மக்கள் கருத்தை உருவாக்குவதற்காக எண்ணற்ற தேசிய பிராந்திய மொழிப் பத்திரிகைகள் தொடங்கப்பட்டன. இவை தேசிய உணர்வைப் பேணுவதில் மிகப்பெருந் தொண்டாற்றின.

**4. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?**

- ஆங்கிலேயப் பேரரசின் காலனிகளான சிலோன் (ஸ்ரீலங்கா) மொரிஷியஸ், ஃபிஜி, மலேயா, கரீபியன் தீவுகள், தென்னாப்பிரிக்கா போன்ற பகுதிகளில் பெருந்தோட்டப் பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- பெருந்தோட்டப் பயிர்களான காபி, தேயிலை, கரும்பு ஆகியன. அத்தோட்டங்களில் வேலை செய்யப் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் தேவைப்பட்டன.
- வறுமையில் உழன்ற பல விவசாயிகளும் நெசவாளர்களும் ஓரளவுப் பணம் சம்பாதிக்கும் நம்பிக்கையுடன் சென்றனர்.
- வறுமையில் வாடிய ஏழைத் தொழிலாளர்களைச் சூழ்ச்சியின் மூலமோ அல்லது கடத்தியோ கொண்டு வர அரசு தனது முகவர்களை (கங்காணிகள்) அனுமதித்தது.
- ஒப்பந்தக் கூலித்தொழிலாளர்கள் ஐந்து வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.
- 1833, 1843 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்கள் மக்களை புலம்பெறச் செய்தது.

**5. மே 1884இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்கவிழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக.**

- 1884 மே 16ல் நடைபெற்ற சென்னை மகாஜனசங்கம் தொடக்கவிழாவில் பங்கேற்ற முக்கிய தலைவர்கள்,
- G.சுப்பிரமணியம், விஜயராகவாச்சாரி, அனந்தாசார்லு, ரங்கையா, பாலாஜிராவ், சேலம் ராமசாமி ஆகியோராவர்.

**6. தொடக்க காலத்தில் இலங்கைக்குத் தொழிலாளர்களை அனுப்பி வைக்கப்பட்டது குறித்து எழுதுக.**

- ஆங்கிலேயப் பேரரசின் காலனி நாடான இலங்கையில் காபி, தேயிலை, கரும்பு ஆகிய தோட்டப்பகுதிக்கு பணியாளர்கள் தேவைபட்டனர்.
- 1815ல் சிலோன் ஆளுநர் மதராஸ் மாகாண ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் பெருந்தோட்டங்களில் வேலைசெய்யக் "கூலிகளை" அனுப்பி வைக்கக் கேட்டுக்கொண்டார்.
- 1833, 1843 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சங்களால் மக்களை புலம் பெயர்ந்து செல்ல கட்டாயப்படுத்தின.
- ஒப்பந்த கூலித் தொழிலாளர் முறையின் கீழ் இலங்கையின் காபி, தேயிலை தோட்டங்களில் இந்தியர்கள் கூலிகளாக வேலை செய்ய சென்றனர்.
- 1877ல் ஏற்பட்ட பஞ்சத்தினால் இலங்கையில் ஏறத்தாழ 3,80,000 தமிழ் கூலித் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

**7. இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.**

- தாதாபாய் நௌரோஜி தனது செல்வச் சுரண்டல் கோட்பாட்டில் காலனி அரசு இந்திய நிர்வாகத்திற்காக செய்யும் செலவுகளை பட்டியல் இட்டுள்ளார்.
- கம்பெனி பங்குதாரர்களுக்கு தர வேண்டிய பங்குத் தொகை, இருப்புப் பாதை துறையில் முதலீடு செய்தவர்களுக்கு தர வேண்டிய வட்டி ஓய்வூதிய அதிகாரிகளுக்கு தர வேண்டிய ஓய்வூதியம் போன்றவையே நிர்வாகச் செலவினங்களாக இருந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- இந்தியாவிற்கும், இந்தியாவிற்கு வெளியிலும் நாடுகளைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட போர்களுக்கான இங்கிலாந்திலிருந்து பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டியும் நிர்வாகச் செலவினங்களை அதிகரித்தது.

## IV. விரிவான விடையளிக்கவும்

**1. இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும், பின்னர் அது இந்திய சமூகத்தைச் சீர்த்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கினை விவாதிக்கவும்.** ஆகஸ்ட் 2022

- மேற்கத்திய கல்வியின் வளர்ச்சி ஒரு மேற்கிந்திய கற்றறிந்தோம் பிரிவை உருவாக்கியது.
- இந்த நவீன சமூக வர்க்கம் "இந்தியாவின் வணிக வர்த்தக சமூகங்கள், நிலபிரபுக்கள், பேவாதேவி செய்யவும், ஆங்கிலம் பயின்ற ஏகாதிபத்திய அரசில் நிர்வாகப்பிரிவில் பணி அமர்த்தப்பட்டோர், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரை உள்ளடக்கியதால் இருந்தது.
- ஆரம்பகாலத்தில் இவர்கள் ஆங்கிலேய நிர்வாகத்தோடு இனக்கமான அணுகுமுறையை கொண்டிருந்தனர்.
- மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்ப்பதில் சிறப்பாக பங்காற்றினர்.
- நவீன இந்திய கற்றறிந்தோம் பிரிவைச்சார்ந்த ராஜாராம் மோகன்ராய், ஈஸ்வரசந்திர வித்யாசாகர் சுவாமி விவேகானந்தர், அரவிந்தகோஷ், கோபாலகிருஷ்ண கோகலே, பிபிபாய் நௌரோஜி, பெரோம்ஷா மேத்தா, சுரேந்திரநாத்பானர்ஜி ஆகியோரும் மற்றோரும் இந்திய அரசியல், சமுதாய மத இயக்கங்களுக்கு தலைமையேற்றனர்.
- மேலைநாட்டு அறிஞர்களான ஜான்லாக், ஜேம்ஸ் ஸ்டுவர்ட்மில், மாஜினி, கரிபால்டி, ரூசோ, தாமஸ்பெயின், மார்க்ஸ் ஆகியோராளும் மற்றவர்களாலும் கூறப்பட்ட தேசியம், மக்களாட்சி, சோசலிசம் போன்ற தத்துவக் கருத்துக்களைக் கற்றறிந்த இந்தியர்கள் அறிந்து கொண்டனர்.
- சுதந்திரமான பத்திரிகை உரிமை, பொதுக்கூட்டங்களில் சுதந்திரமாய் பேசும் உரிமை, சுதந்திரமாக ஒன்று கூடும் உரிமை ஆகிய இயக்கையான உரிமைகளை கற்றறிந்த இந்தியரின் ஐரோப்பியக் கூட்டாளிகள் தங்கள் நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்து கடைபிடிக்கவிரும்பினர்.
- அதற்கு பல அமைப்புகள் உருவாக்கப்பட்டன.
- இச்செயல் போக்குவரத்து வசதியின் மிகப்பெரும் விரிவாக்கம்.
- இந்தியாமுழுவதும் நிறுவப்பட்ட அஞ்சல், தந்தி சேவைகள் ஆகியன இதுபோன்ற விவசாயங்களை சாத்தியமாக்கின.

**2. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப்-பொருளாதாரக் காரணிகளை ஆய்க.**

**புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகள் :**

- இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர் நிலம் விற்பனை பொருளாக்கப்பட்டது. வேளாண்மை வணிகமயமாக்கப்பட்டது.
- வறட்சி, பஞ்சம் போன்ற நிகழ்வுகளைக் கணக்கில் கொள்ளாமல் நிலவரியைப் பணமாகக் கணக்கிட்டு நிர்ணயம் செய்தனர்.
- விவசாயிகள் சந்தைக்கு தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்தனர்.

**கட்டுப்பாடுகளற்ற வணிகக் கொள்கை :**

- இங்கிலாந்தில் தொழில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து கம்பெனி பின்பற்றியக் கொள்கையானது அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிக கொள்கையாகும்.
- பருத்தி, சணல், பட்டு ஆகிய கச்சாப் பொருட்கள் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இக்கச்சாப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்கள் மீண்டும் இந்தியச் சந்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
- இம்மாற்றத்தினால் இந்தியாவின் மூலாதாரமாக விளங்கிய வேளாண்மை பாதிக்கப்பட்டு உணவுப் பற்றாக்குறைக்கு இட்டுச் சென்றது.

**அவுரி சாகுபடி :**

- இந்திய குத்தகை விவசாயிகள் அவுரியை பயிரிட கட்டாயப்படுத்தப்பட்டனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- அவுரிக்குப் பண்ணையார் கொடுக்கும் விலையோ சந்தை விலையை விடக் குறைவாக இருந்தது.
- வேளாண்மை பாதிக்கப்பட்டது.

**பஞ்சங்கள் :**

- ஆங்கிலேயர் கடைபிடித்த தொழில் கொள்கையாலும், நிலவரி கொள்கையாலும் பஞ்சங்கள் மீண்டும் மீண்டும் ஏற்பட்டன.
- ஆங்கிலேயர் பஞ்சங்களின் போது தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர்.
- 1700 - 1900 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் பஞ்சத்தின் காரணமாக 25 மில்லியன் மக்கள் உயிரிழந்தனர்.
- 1891 - முதல் 1900 வரையிலான பத்தாண்டுகளின் இந்தியாவில் 19 மில்லியன் மக்கள் உயிரிழந்ததாக மெட்ராஸ் டைம்ஸ் பத்திரிக்கையின் ஆசிரியர் வில்லியம் டிக்பை குறிப்பிட்டுள்ளார்.
- ஒரிசா மற்றும் மதராஸ் மாகாணங்களில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது.

**ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் :**

- பெருந்தோட்டப் பயிர்களான காபி, தேயிலை, கரும்பு ஆகியன அத்தோட்டங்களில் வேலை செய்ய பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் தேவைப்பட்டன.
- சிலோன் (ஸ்ரீலங்கா) மொரிஜியஸ், ஃபிகு, மலோயா, கர்பியன் தீவுகள், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு மக்கள் குடிபெயர்ந்தனர்.
- ஒப்பந்தக் கூலித் தொழிலாளர்கள் 5 வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.

---

**3. இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?** மார்ச் 2020 மே 2022

**அ) இந்தியர்களுக்கு எதிரான அடக்குமுறை:**

- அரசுக்கு எதிரான வெறுப்புணர்வைத் தூண்டும் முயற்சிகளை மேற்கொள்வோரை தண்டனைக்குள்ளாக்கும் இந்திய தண்டனைச் சட்டம் (1870) பிரிவு 124A அடக்கு முறைச் சட்டம்
- பத்திரிகைகளைத் தணிக்கைக்கு உட்படுத்திய பிராந்திய மொழிச் சட்டம் (1878) ஆகியன எதிர்ப்புகளைத் தூண்டின.
- இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான சுங்கவரி குறைக்கபட்டதும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகள் மீதான உள்நாட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டதும் நாடுமுழுவதும் மனநிறைவின்மையை ஏற்படுத்தியது.

**ஆ) இனவெறிக் கொள்கைகள்:**

- ஆங்கிலேயர் இனப்பாகுபாட்டுக் கொள்கையைப் பின்பற்றினர்.
- அரசு உயர்பதவிகளில் இந்தியர்களைப் பணியமர்த்தாமல் திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டதை மக்கள் இந்திய எதிர்ப்புக் கொள்கையின் நடவடிக்கையாக கருதினர்.
- இதன் விளைவாக இந்திய உயர் வகுப்பாரிடையே ஏற்பட்ட வெறுப்பு ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக இந்தியர்கள் புரட்சி செய்ய இட்டுச் சென்றது.
- குடிமைப் பணிக்காணத் தேர்வுகள் அறிமுகமானபோது இந்தியர்கள் அத்தேர்வுகள் அதிகம் பேர் வெற்றிபெற்றனர்.
- இதனைத்தடுக்கும் விதமாக வயது வரம்பு 21லிருந்து 19 ஆகக் குறைந்தது.
- இதைப்போலவே குடிமைப் பணித்தேர்வுகளை ஒரே நேரத்தில் இந்தியாவிலும் நடத்த வேண்டுமென இந்தியாவின் கற்றறிந்த நடுத்தர வர்க்கம் வைத்த வேண்டுகோளை ஆங்கில அரசு ஏற்றுக் கொள்ள மறுத்தது.

**இல்பர்ட் மசோதா:**

- இல்பர்ட் மசோதா 1883ம் ஆண்டு பிப்ரவரி 9ம் தேதி ரிப்பன் (மார்க்வெல் ஆஃப் ரிப்பன்) அரசப் பிரதிநியாக இருந்த போது இயற்றப்பட்டது.
- இதன் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்றனர்.
- ஆனால் ஐரோப்பியர்களின் எதிர்ப்பினால் மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக.**

**இந்திய தேசிய காங்கிரஸின் நோக்கங்கள்:**

- ➢ நாடெங்குமுள்ள தேசிய உணர்வுள்ள தொண்டர்களை இணைத்து நட்புறவை வளர்த்தல்.
- ➢ இனம், மதம் மற்றும் வாழுமிடம் ஆகிய வேறுபாடு இல்லாது தேசிய உணர்வை பெருக்குதல் மற்று ஒருமைபாட்டுணர்வை வளர்த்தல்.
- ➢ திட்டங்களை முறையுடன் வகுத்து மக்களின் தேவைகளை அரசு அறியும்படி செய்தல்.
- ➢ நீதித்துறையையும், நிர்வாகத்துறையையும் தனித்தனியாகப்பிரித்தல்
- ➢ இந்திய மாகாணங்களில் பிரதிநிதித்துவ சட்டசபை நிறுவி சுயாட்சி வளர்த்தல்.
- ➢ இராணுவ செலவினங்களைக் குறைத்தல், பத்திரிக்கைகளுக்குச் சுதந்திரம் வழங்குதல்.
- ➢ சட்ட சபைகளை விரிவுபடுத்துதல், ஆகியனவாகும்.
- ➢ இந்திய குடிமைப் பணித் தேர்வுகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்பது காங்கிரசின் முக்கிய கோரிக்கையாகும்.

**தொடக்ககால தேசியவாதிகளின் பங்களிப்பு:**

- ➢ நாம் ஒரே நாடாக என்ற கருத்து வடிவம் பெற உதவியவர்கள் இத்தொடக்ககால தேசியவாதிகளே.
- ➢ அவர்கள் உண்மையாகவே இம்மண்சார்ந்த காலணிய எதிர்ப்புச் சித்தாந்தத்தையும் தாங்களாகவே தங்களுக்கென ஒரு செயல்திட்டத்தையும் உருவாக்கி கொண்டனர்.
- ➢ பிபின் சந்திரபால், பாலகங்காதரதிலகர், லாலா லஜபதிராய் போன்ற தலைவர்கள் தீவரமான அணுகுமுறைகளை பரிந்துரைந்தனர். இவர்கள் ‘தீவிரதேசியவாதிகள்’ என்று அழைக்கப்பட்டனர்.
- ➢ “சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்” என திலகர் முழங்கினார்.
- ➢ 1905 இல் வங்கப்பரிவினையை ஆவேசமாக எதிர்த்தனர். சுதேசியக்கம் ஆங்கிலேய ஆட்சியை நேரடியாக எதிர்த்ததோடு, சுதேசித்தொழில்கள், தேசியக்கல்வி, சுயஉதவி, இந்தியமொழிகளை பயன்படுத்துதல் ஆகியகருத்துகளை ஊக்குவித்தது.
- ➢ மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இருதரப்பினரும் அவர்கள் வழிகாட்டிகளாகப் பொறுப்புவகித்து பத்திரிக்கைகள் முதலான பல்வேறு வகைகளில் தேசிய உணர்வை ஊட்டினர்.

## V. செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

**1. இந்தியாவில் மேற்கத்தியக் கல்வி அறிமுகப்படுத்தப்படாமலிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை விவாதிக்கவும்.**

**2. தமிழ்நாட்டிலிருந்த ஆரம்ப கால தேசியவாதிகளின் வாழ்க்கை வரலாறு மற்றும் உருவப் படங்களைத் தொகுக்கவும்.**

- ➢ சுதேசித் தொழில்கள், தேசியக் கல்வி, சுய உதவி, இந்திய மொழிகளை பயன்படுத்தல் போன்ற கருத்துகள் ஊக்குவிக்கப்பட்டன.
- ➢ இந்தியாவின் முதுபெரும் தலைவர் “தாதாபாய் நௌரோஜி செல்வ சுரண்டல் கோட்பாட்டை முன் வைத்தார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



## VI. வரைபடம்

1. இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. பம்பாய் | 2. கல்கத்தா | 3. சென்னை | 4. அகமதாபாத் | 5. லக்னோ |
| 6. கான்பூர் | 7. சூரத் | 8. லாகூர் | 9. பூனா | 10. அலகாபாத் |






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. **"இந்தியாவின் குரல் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் ...............**
அ) சுரேந்திர நாத் பானர்ஜி ஆ) அன்னி பெசன்ட் அம்மையார்
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) லோகமான்ய திலகர்
**விடை: இ) தாதாபாய் நௌரோஜி**

2. **இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது ................**
அ) 1885 டிசம்பர் 28 ஆ) 1885 நவம்பர் 28
இ) 1885 அக்டோபர் 28 ஈ) 1884 டிசம்பர் 26 **விடை: அ) 1885 டிசம்பர் 28**

3. **மாறுபட்ட ஒன்றை தேர்வு செய்க.**
அ) டல்ஹௌசி பிரபு ஆ) கானிங் பிரபு
இ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஈ) சுப்பிரமணிய பாரதியார்
**விடை: ஈ) சுப்பிரமணிய பாரதியார்**

4. **பாலகங்காதர திலகர் வெளியிட்ட பத்திரிக்கை ..............**
அ) இந்தியாவின் குரல் ஆ) பெங்காலி
இ) ஆனந்தமடம் ஈ) மராட்டா **விடை: ஈ) மராட்டா**

5. **பின்வருவன பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க ..........**

| | | | |
|---|---|---|---|
| 1 | சூரத்பிளவு | 1 | 1878 |
| 2 | வங்கப் பிரிவினை | 2 | 1852 |
| 3 | வட்டார மொழி பத்திரிக்கை சட்டம் | 3 | 1907 |
| 4 | சென்னை வாசிகள் சங்கம் | 4 | 1905 |

அ) 3,2,1,4 ஆ) 3,4,1,2 இ) 4,3,1,2 ஈ) 4,1,3,2
**விடை: ஆ) 3,4,1,2**

6. **பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?**

| | | | |
|---|---|---|---|
| 1 | சென்னை மகாஜன சங்கம் | 1 | 1852 |
| 2 | இந்திய தேசிய காங்கிரஸ் | 2 | 1884 |
| 3 | திலகர் கைது | 3 | 1897 |
| 4 | இலபர் மசோதா கிளர்ச்சி | 4 | 1885 |

**விடை: இ) திலகர் கைது - 1897**

7. **பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான காலவரிசையை தேர்வு செய்க.**
அ) இன்டிகோ புரட்சி ஆ) பிரிட்டிஷ் இந்தியா அடிமைமுறை ஒழிப்பு
இ) சென்னை பல்கலைக்கழகம் ஈ) இந்திய தேசிய காங்கிரஸ்
அ) iv, ii, iii, i ஆ) iv, iii, ii, i
இ) ii, iii, i, iv ஈ) i, iii, ii, iv **விடை: இ) ii, iii, i, iv**

8. **இராஜாராம் மோகன்ராயின் வங்க மொழி பத்திரிக்கை**
அ) மிராத்-உல்-அக்பர் ஆ) சம்வத்கௌமதி
இ) மராத்தா ஈ) சுதேசமித்திரன் **விடை: ஆ) சம்வத்கௌமதி**

9. **'மெட்ராஸ் டைம்ஸ்' பத்திரிக்கையின் ஆசிரியர்**
அ) T.B மெக்காலே ஆ) பாரதியார் இ) கேசவசந்திரசென் ஈ) வில்லியம் டிக்பை
**விடை: ஈ) வில்லியம் டிக்பை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**10. 'பெங்காலி' என்னும் நூலின் ஆசிரியர் ........**

அ) தாதாபாய் நௌரோஜி ஆ) சுரேந்திரநாத் பானர்ஜி

இ) W.C. பானர்ஜி ஈ) திலகர் **விடை: ஆ) சுரேந்திரநாத் பானர்ஜி**

**11. 1835ல் புகழ்பெற்ற "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்" எனும் குறிப்புகளை வெளியிட்டவர் .......**

அ) சார்லஸ் உட்ஸ் ஆ) வில்லியம் டிக்பை

இ) T.B. மெக்காலே ஈ) எல்பின்ஸ்டன் **விடை: இ) T.B.மெக்காலே**

**12. 1856-57ல் கல்கத்தாவிலிருந்து டிரினிடாட் சென்ற கப்பலில் பயணம் செய்தவர்கள் குறித்த பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை/எது?**

**கூற்று 1 :** நீண்ட கடல் பயணத்தில் தொழிலாளர்கள் பலர் வழியிலேயே இறந்தனர்.

**கூற்று 2 :** ஆண்கள் 12.3 விழுக்காட்டினரும், பெண்களில் 18.5 விழுக்காட்டினரும் இறந்துவிட்டனர்.

**கூற்று 3 :** சிறுவர்கள், சிறுமிகள், குழந்தைகள் 40 விழுக்காட்டினர் இறந்துவிட்டனர்.

அ) 1,2 ஆ) 1,3 இ) 2,3 ஈ) இவை அனைத்தும்

**விடை: அ) 1,2**

**13. கூற்று : இல்பர்ட் மசோதாவிற்கு ஆதரவாக 1883ல் கிளர்ச்சிகள் நடைபெற்றன.**

**காரணம் : ஆனால் இப்போராட்டங்களும் கிளாச்சிகளும் ஒருங்கிணைக்கப்படாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே நடைபெற்றன.**

அ) கூற்று காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

**விடை: ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**

## II. சுருக்கமான விடையளிக்கவும்

**1. இந்திய தேசிய இயக்கம் மிகப்பெரும் மக்கள் இயக்கமாக எப்போது மாறியது?**

1915ல் மோகன்தாஸ் கரம்சந் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி தலைமையேற்றதிலிருந்து இந்திய தேசியம் மிகப்பெரும் மக்கள் இயக்கமாக மாறியது.

**2. 1857ல் ஆங்கிலப் படைகளால் டெல்லி முற்றுகை குறித்து பம்பாய் மாகாண முன்னாள் ஆளுநர் எல்பின்ஸ்டனின் கூற்றுகளை ஆய்க.**

- 1857 ஜுன் - செப்டம்பர் மாதங்களில் ஆங்கிலப்படைகளால் டெல்லி முற்றுகையிடப்பட்டது.
- இதனைகுறித்து பம்பாய் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எல்பின்ஸ்டன் அப்போதைய இந்தியாவின் எதிர்கால வைஸ்ராய் சார்ஜான் லாரன்சுக்கு கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்.
- நண்பன் பகைவன் என்று வேறுபாடின்றி முழுவீச்சிலான பழிவாங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கொள்ளையடிப்பதைப் பொறுத்தமட்டில் நாம் உண்மையாகவே நாதிர்ஷாவை மிஞ்சிவிட்டோம்" என கூறியுள்ளார்.

**3. இந்தியாவின் பழம் பெருமையை வணங்குதல் - ஆய்க.**

- வில்லியம் ஜோன்ஸ் சார்லஸ் வில்கின்ஸ், மேக்ஸ்முல்லம் போன்ற கீழையுலக அறிஞர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு அராபிய, பாரசீக சமஸ்கிருத மொழிகளிலிருந்து மத வரலாற்று இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர்.
- இந்தியாவின் மரபு, புலமை ஆகியவற்றின் செழுமையால் கவரப்பட்ட பல தொடக்க கால தேசியவாதிகள் இந்தியாவின் பண்டையப் பெருமையை மீட்டெடுக்க ஆர்வத்துடன் வேண்டினர்.
- "தேசியத்தின் குறிக்கோளானது இந்தியச் சிந்தனையை, இந்திய குறைநலன்களை, இந்திய உணர்வுகளை, இந்திய ஆற்றலை, இந்தியாவின் உன்னதத்தை மீட்டெடுப்பதாகும்.
- மேலும் உலகைத் தடுமாறச் செய்யும் பிரச்சனைகளை இந்திய மனப்பாங்குடன் இந்திய நிலைப்பாட்டில் தீர்த்துவைப்பதாகும்" என அரவிந்கோஷ் எழுதியுள்ளார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. குறுகிய விடையளிக்கவும்

**1. ஆங்கிலேயருக்கு முந்தைய இந்தியாவில் கல்வியின் நிலை எவ்வாறு இருந்தது?**

- காலனிய காலத்திற்கு முந்திய இந்தியாவில் கல்வியானது சாதி, மத அடிப்படையில் இருந்தது.
- இந்துக்களிடையே பிராமணர்கள் உயர்நிலை சார்ந்த சமய, தத்துவ அறிவினைப்பெறும் தனி உரிமை பெற்றிருந்தனர்.
- புனிதமான மொழி என கருதப்பட்ட சமஸ்கிருத மொழி வழியில் கல்விகற்றனர்.
- கட்டடக்கலை - உலோகவியல் சார்ந்த அறிவுத்திறன் பரம்பரை ஆக்கப்பட்டது.
- பெண்களும் ஒடுக்கப்பட்டோரும் ஏனைய ஏழை மக்களும் கல்வி கற்க தடை இருந்தது.

**2. பாலகங்காதர திலகரின் ஆங்கிலேய ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றி கூறுக.**

- தேசிய இயக்கத்தில் மத்தியதர வகுப்பினரும் விவசாயிகளும், கைவினைஞர்களும் தொழிலாளர்களும் மிக முக்கியமான பங்கினை வகிக்கமுடியும் என பாலகங்காதரதிலகர் உறுதியாக நம்பினார்.
- இந்தியாவில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக தேசந்தழுவிய எதிர்ப்புக்கு அவர் அழைப்பு விடுத்தார்.
- "சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என முழங்கினார்.
- 1897 ஜூலை 27ல் திலகர் கைது செய்யப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124A யின் கீழ் குற்றம் சாட்டப்பட்டார்.
- திலகர் தீவிர காங்கிரஸ் தேசவாதியாக இருந்தாலும் இவர் கைது செய்யப்பட்டதை அனைவரும் எதிர்த்தனர்.
- கருத்துச் சுதந்திரம், பத்திரிக்கைச் சுதந்திரம் ஆகிய இரு உரிமைகளும் இந்திய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய கூறுகளாய் விளங்கின.

**3. சமூக, சமய சீர்திருத்த இயக்கங்களின் வகைகளை கூறுக.**

I. **சீர்திருத்த இயக்கங்கள்:**

i) ராஜாராம் மோகன்ராயால் நிறுவப்பட்ட பிரம்ம சமாஜம்,
ii) டாக்டர் ஆத்மராம் பாண்டுரங் உருவாக்கிய பிரார்த்தனை சமாஜம்,
iii) சர் சையத் அகமது கானால் பிரதிநிதித்துவம் பட்ட அலிகார் இயக்கம் ஆகியவை சீர் திருத்த இயக்கங்கள் ஆகும்.

II. **மீட்பு இயக்கங்கள்:**
i) ஆரியசமாஜம்
ii) ராமகிருஷ்ண இயக்கங்கள்
iii) தியோபந்த் இயக்கங்கள்

III. **சமூக இயக்கங்கள்:**
i) புனேயில் ஜோதிபா பூலே,
ii) கேரளாவில் நாராயணகுரு, அய்யன்காளி
iii) தமிழ்நாட்டில் இராமலிங்க அடிகள், வைகுண்டசாமிகள்
iv) அயோத்திதாசர்

## IV. விரிவான விடையளிக்கவும்

**1. "தாதாபாய்" நௌரோஜியும் அவர் முன்வைத்த சுரண்டல் கோட்பாடும் பற்றி" விவரி?**

**முதுபெரும் தலைவர்:**

- இந்திய தேசியத்தின் முதுபெரும் தலைவர் என அறியப்படும் தாதாபாய்நௌரோஜி தொடக்க கால தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவர் ஆவார்.
- 1870 இல் பம்பாய் நகராட்சி கழகத்திற்கும், நகரசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1892 ல் இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அவர் லண்டனில் 'இந்தியச்சங்கம்' (1865), 'கிழக்கிந்திய கழகம்' (1866) எனும் அமைப்புகளை உருவாக்கினார்.
- மூன்று முறை இந்தியதேசிய காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**செல்வச்சுரண்டல் கோட்பாடு:**

- 1901ல் "வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்" என்னும் புத்தகமே இந்திய போராட்டத்திற்கு அவர் செய்த முக்கிய பங்களிப்பு ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- இதில் “செல்வச் சுரண்டல்” எனும் கோட்பாட்டை முன் வைத்தார்.
- வசூலிக்கப்பட்டவரியை அந்நாட்டு மக்களின் நல்வாழ்விற்கே செலவழிக்கவேண்டும் ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் வசூலிக்கப்பட்டவரி இங்கிலாந்தின் நலனுக்காகச் செலவு செய்யப்படுகிறது என்றார்.
- 1835 முதல் 1872 முடிய ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 13 மில்லியன் பவுண்டுகள் மதிப்புடையப் பொருட்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
- ஆனால் அந்த அளவிற்கு பணம் இந்தியா வந்து சேரவில்லை எனவும் கூறினார்.
- லாபத்தில் வழங்கப்பட வேண்டியபங்கு இருப்பு பாதைத் துறையில் முதலீடு செய்தவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டவாறு தரப்படவில்லை.
- பணிநிறைவு பெற்றுவிட்ட அதிகாரிகளுக்குள் தளபதிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம், இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியிலும் நாடுகளைக் கைப்பற்ற நடைபெற்ற போர்களுக்காக இங்கிலாந்திடம் செலுத்த வேண்டிய வட்டி எல்லாவற்றிற்கும் பதிலாகவே பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக கூறினார்.
- தாயகக்கட்டணம் என்னும் பெயரில் ஆண்டொன்றுக்கு 30 மில்லியன் பவுண்டுகள் நஷ்டம் ஏற்படுத்துவதாக நெளரோஜி உறுதிபடக் கூறினார்.
- தாதாபாய் நெளரோஜியால் முன்வைக்கப்பட்ட செல்வச் சுரண்டல் கோட்பாடு இந்தியாவின் செல்வவளத்தை ஆங்கிலேயர் கொள்ளையடிப்பதை வெட்ட வெளிச்சமாக்கியது.

★ ★ ★ ★ ★



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# அரசு பொதுத் தேர்வு - மார்ச் 2023

[கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90]

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்ட ஆண்டு:
அ) 1930 ஆ) 1920 இ) 1935 **ஈ) 1925**

2. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) திலகர் ஆ) மகாத்மா காந்தியடிகள்
இ) பி.பி. வாடியா **ஈ) மதன்மோகன் மாளவியா**

3. "How India Wrought for Freedom" என்ற புத்தகத்தின் ஆசிரியர்:
அ) லாலா லஜபதி ராய் **ஆ) அன்னிபெசன்ட்**
இ) ஊ.சு. தாஸ் ஈ) திலகர்

4. **கூற்று :** இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர் முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.
**காரணம் :** அகழிப் போர்முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டுவீச்சு பிரபலமானது.
அ) கூற்று சரி. காரணம் தவறு.
**ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
இ) கூற்று தவறு. காரணம் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

5. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?
அ) ஃபெரோஸ்ஷா மேத்தா ஆ) அரவிந்த் கோஷ்
**இ) லாலா லஜபதி ராய்** ஈ) தாதாபாய் நௌரோஜி

6. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்:
**அ) A.O. ஹியூம்** ஆ) சுபாஷ் சந்திர போஸ்
இ) பால கங்காதர திலகர் ஈ) காந்தியடிகள்

7. கிரிப்ஸ் தூதுக்குழு ________ ஆட்சியின்போது இந்தியாவிற்கு வருகை தந்தது.
அ) மௌண்ட்பேட்டன் பிரபு ஆ) வேவல் பிரபு
இ) இர்வின் பிரபு **ஈ) லின்லித்கோ பிரபு**

8. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை:
(i) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல்
(ii) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பியளித்தல்
(iii) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்
(iv) அரசுக்கு எதிரான சதிவேலைகளில் ஈடுபடுதல்
அ) (i) மற்றும் (iv) **ஆ) (i) மற்றும் (ii)** இ) (iii) மற்றும் (iv) ஈ) (ii) மற்றும் (iii)

9. ஐ.நா. சபையின் முதல் பொதுச் செயலாளர் டிரிக்வேலை ________ ஐ சேர்ந்தவராவார்.
அ) சிங்கப்பூர் ஆ) பர்மா **இ) நார்வே** ஈ) ஜப்பான்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



10. 1923 - இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் - ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுதந்திரா கட்சி **ஆ) சுயராஜ்ய கட்சி** இ) கம்யூனிஸ்ட் கட்சி ஈ) கதார் கட்சி

11. கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?
அ) புவியியல் கண்டுபிடிப்பு **ஆ) மறுமலர்ச்சி**
இ) வர்த்தகப் புரட்சி ஈ) சமயச் சீர்திருத்தம்

12. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.
(i) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு
(ii) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்
(iii) மௌண்ட்பேட்டன் திட்டம்
அ) (iii), (ii), (i) **ஆ) (ii), (i), (iii)** இ) (ii), (iii), (i) ஈ) (i), (ii), (iii)

13. ________ க்குப் பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
அ) இரண்டாம் ஆங்கிலோ - சீனப் போர் ஆ) ரஷ்ய - ஜப்பானிய போர்
**இ) சீன - ஜப்பானிய போர்** ஈ) இரண்டாம் அபினி போர்

14. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழுங்குகிறது?
**அ) 100** ஆ) 200 இ) 75 ஈ) 150

15. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1917 **ஆ) 1915** இ) 1918 ஈ) 1916

16. ஜெர்மானிய ஒருங்கிணைவை அடைவதற்கு 'இரத்தமும், இரும்பும்' என்ற கொள்கையை கையாண்டவர் ________.
அ) அரசர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் ஆ) க்யூசுப் கரிபால்டி
இ) மூன்றாம் நெப்போலியன் **ஈ) ஆட்டோ வான் பிஸ்மார்க்**

17. "இந்திய வெளியுறவுக் கொள்கையின் முதன்மையான சிற்பி"என அழைக்கப்படுபவர் யார்?
அ) லால் பகதூர் சாஸ்திரி ஆ) இராஜாஜி
இ) வல்லபாய் படேல் **ஈ) ஜவஹர்லால் நேரு**

18. இந்திய தேசிய இராணுவப்படை மீதான விசாரணை நடைபெற்ற இடம்:
அ) வைஸ்ரீகல் லாட்ஜ், சிம்லா **ஆ) செங்கோட்டை, புதுடெல்லி**
இ) சிங்கப்பூர் ஈ) பினாங்

19. 1937 - இல் நடைபெற்ற தேர்தலில் ________ காங்கிரஸ் வெற்றி பெற்றது.
அ) 5 மாகாணங்களில் ஆ) 12 மாகாணங்களில்
இ) 8 மாகாணங்களில் ஈ) **7 மாகாணங்களில்**

20. பிரெஞ்சுப் புரட்சியின் காலம் ________.
அ) 1756 - 1763 ஆ) 1775 - 1783 இ) 1689 - 1755 **ஈ) 1789 - 1795**

## பகுதி - II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21. தொடக்க கால முக்கிய இந்திய தேசியவாதிகளைக் கண்டறிக. அலகு - 1
22. மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்? அலகு - 2
23. பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை குறித்து எழுதுக. அலகு - 4
24. "இரண்டாவது லாகூர் சதி" என்றறியப்படும் நிகழ்வு யாது? அலகு - 5
25. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக. அலகு - 7
26. ஜே வி பி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன? அலகு - 8
27. நாடு விடுதலை அடைந்தபோது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக. அலகு - 9
28. இத்தாலியை, "வெறும் பூகோள வெளிப்பாடே" என மெட்டர்னிக் ஏன் கூறினார்? அலகு - 12
29. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுக. அலகு - 13
30. ஹிட்லர் பற்றி எழுதுக. அலகு - 13



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**7 x 3 = 21**

31. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக. அலகு - 1
32. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவாதிக்கவும். அலகு - 3
33. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக. அலகு - 4
34. சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின முன்மொழிவுகளை விவாதிக்கவும். அலகு - 7
35. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை? அலகு - 8
36. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை? அலகு - 9
37. 1492 - இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக. அலகு - 10
38. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக எழுதுக. அலகு - 15
39. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக. அலகு - 14
40. அணிசேரா இயக்கம் (NAM) பற்றி எழுதுக. அலகு - 15

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக - பொருளாதாரக் காரணிகளை ஆய்க. அலகு - 1

**(அல்லது)**

ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக. அலகு - 3

42. அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக. அலகு - 2

**(அல்லது)**

ஆ) 1919 - 1939 - ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக. அலகு - 5

43. அ) ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? அலகு - 6

**(அல்லது)**

ஆ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. அலகு - 4

44. அ) 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதன் பல்வேறு நிலைகளைக் கண்டறிக. அலகு - 8

**(அல்லது)**

ஆ) இந்திய விடுதலைக்குப்பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க. அலகு - 9

45. அ) பிரெஞ்சு புரட்சிக்கான காரணங்களை விவாதிக்கவும். அலகு - 11

**(அல்லது)**

ஆ) முதல் உலகப் போர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் பொதுவான மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டு எழுதுக. அலகு - 15

46. அ) இரண்டாம் உலகப் போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக. அலகு - 14

**(அல்லது)**

ஆ) இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

i) மீரட் ii) லக்னோ iii) கான்பூர் iv) சம்பரான் v) பூனா

47. அ) போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியை, குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்த பங்கு குறித்து விவரிக்கவும். அலகு - 15

**(அல்லது)**

ஆ) 1900 முதல் 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக. அலகு - 8

❖❖❖❖



Kindly send me your study materials to padasalai.net@gmail.com